செ.வெ.எண்: 06 நாள்: 03.01.2018

# பத்திரிக்கைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் மாநில அளவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்பு விருது, திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்க வேளாண்மைத்துறையில் பதிவு செய்யவேண்டும் என்று வேளாண்மைத் துறை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சிறப்பு விருது**

மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி முறையில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு ரூ. 5 லட்சம் பரிசுத் தொகையும் ரூ. 3,500/-மதிப்புள்ள பதக்கமும் 2019 ம் ஆண்டு குடியரசு தின விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் விவசாயிகள் பதிவுக் கட்டணமாக ரூ.150-ஐ தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெற கீழ்க்காணும் வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

- குறைந்தபட்சம் 50 சென்ட் நிலம் அறுவடை செய்யப்பட வேண்டும்
- நில உரிமையாளர்களும் குத்தகைதாரர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ளத் தகுதியுடையவர்கள்
- இப்போட்டியில் பங்குபெற விரும்பும் விவசாயிகள் ரூ.150/- பதிவுக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்
- குறைந்தபட்ச நெல் மகசூல் 2500 கிலோ/ஏக்கர் இருக்க வேண்டும்
- மாநில அளவு போட்டிக்கான கடைசித் தேதி 31.03.2018.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பு விருதுப் போட்டியில் கலந்துகொள்ளும் விவசாயிகள் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்துகொள்ள போட்டி விதிமுறைகள் தொடர்பாக கூடுதல் விபரங்கள் பெற தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினைத் தொடர்பு கொண்டு பயனடையக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்காணும் தகவலை வேளாண்மை இணை இயக்குநர் திரு.மு.இராஜகோபால் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**